தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 8 இதழ் : 11 செப்டம்பர் – 2012



# நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்...

1 கொரி. 3:16

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

சுதேச ஊழியர் சாட்சி

# வில்லியம் டாமோர்



**ஜீவகூட்டா, இராஜஸ்தான்**

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! என் பெயர் வில்லியம் டாமோர். நான் இராஜஸ்தான் மாநிலம், பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள ஜீவகூட்டா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எனது கிராம ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை அறியாமல் அனைத்து விதமான பாவங்களிலும் ஈடுபட்டிருந்தனர். அவர்களைப் போலவே நானும் சாராயம் குடித்தல், பீடி குடித்தல் சண்டையிடுதல் போன்ற பாவங்களில் ஈடுபட்டு மிகவும் மோசமான ஒரு வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தை ஒரு முறை கூட கேள்விப்பட்டது கிடையாது.


இந்த சூழ்நிலையில் வாழ்ந்து வந்த எனக்கு ஒரு ஆண்டு காலமாக வயிற்று வலி இருந்து வந்தது. அநேக மருத்துவங்கள் செய்தும் பலனில்லை. மந்திரவாதிகளை நாடிச் சென்றபோது அவர்கள் எனக்குள் பிசாசு இருப்பதாக கூறினார்கள். மிகவும் மனம் கலங்கி அழுது நின்ற வேளையில், கும்புரா என்ற கிராமத்தில் அற்புத சுகமளிக்கும் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது என்றும், அதில் மோகன் சி. லாசரஸ் என்ற ஊழியர் தமிழகத்தில் இருந்து வருகிறார் என்றும் கேள்விப்பட்டு, அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அந்தக் கூட்டத்தின் ஜெப வேளையில் சுகத்திற்காக ஜெபிக்கும்போது நான் என்னுடைய வயிற்றின் மேல் கை வைத்து விசுவாசத்துடன் ஜெபித்தேன். ஜெபநேரத்தில் தேவன் எனது வயிற்று வலியிருந்து முழுமையான சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை!

அதனைத் தொடர்ந்து கும்புரா கிராமத்தில் ஊழியம் செய்து வந்த சுதேச ஊழியர் சகோ. பத்தியா பாப் என்னை கர்த்தருக்குள் வழி நடத்தினார்கள். கும்புரா கிராமத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனைகளில் பங்கு பெற்றேன். தேவன் என்னை பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து, ஊழியம் செய்யும்படி என்னை அழைத்தார். அழைப்பினை ஏற்று என்னை தேவனுக்கென்று முழுமையாக அர்ப்பணித்து, எனது சொந்த கிராமத்தை மையமாக வைத்து ஊழியம் செய்து வந்தேன்.

அதன்பின் B.Th., இறையியல் கல்வி கற்க தேவன் கிருபை செய்தார். 20.11.2009 அன்று ஷாலோம் போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு வல்லமையாக ஊழியம் செய்யும்படி தேவன் கிருபை புரிந்துள்ளார். எனக்காகவும், எங்களது ஊழியங்களுக்காகவும், எனது நான்கு பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Jesus Redeems, Nalumavadi.**

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவகிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், ஆதரவினாலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நம் ஷாலோம் ஊழியங்கள் வளர்ந்து வருகிறது. தேவன் ஊழியங்களை அபரிமிதமாக ஆசீர்வதித்து வருகிறார்.

தேவ நாமம் மகிமைப்பட, எங்கள் அன்பு மகன் டைட்டஸ் – மெர்லின் திருமணம் 06.08.2012 அன்று தூத்துக்குடியில் மிக ஆசீர்வாதமாக நடைபெற தேவன் கிருபை தந்தார். மேலும் தூத்துக்குடியிலும், குஜராத், மத்திய பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் நடைபெற்ற திருமண வரவேற்பு வைபவங்களிலும் தேவன் தன் ஆசீர்வாதத்தினால் நிரப்பினார். இதற்கான விபரங்களை உள் பக்கத்தில் வாசித்து தேவனை துதியுங்கள். எங்கள் குடும்பத்தையும், ஷாலோம் ஊழியங்களையும் நேசித்து, ஜெபித்து, ஆசீர்வதித்து வாழ்த்திய அனைத்து பரிசுத்தவான்கள், தேவ ஊழியர்கள், போதக பிதாக்கள், ஷாலோம் ஆதரவாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் ஷாலோம் ஊழியர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அதற்காக உழைத்த தேவ பிள்ளைகள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

தேவன், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நல்ல மழையை கட்டளையிட்டு நம் விசுவாசிகளுக்கு நல்ல விளைச்சலை கட்டளையிட்டுள்ளார், அதற்காக தேவனைத் துதியுங்கள். ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக தாங்கப்படும் நம் பீல் ஆதிவாசி மாணவர்கள் நன்றாக படித்து வருகிறார்கள். பீல் ஆதிவாசி மாணவர்களை ஜெபித்து தாங்கும் ஆதரவாளர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். குறிப்பாக பீல் ஆதிவாசி மாணவர் கல்வி மேம்பாட்டு திட்டத்திற்கு சிறப்பு காணிக்கை அனுப்பினவர்களுக்காகவும் தேவனை துதித்து நன்றி கூறுகிறோம்.

### ஜெபியுங்கள்

- செப்டம்பர் மாதத்தில் நடைபெற உள்ள ஊழியர்கள் கூடுகை மற்றும் 3 மாநிலங்களிலும் நடைபெறவுள்ள வாலிபர் முகாம்களுக்காக குறிப்பாக ஷாலோம் திருச்சபைகளிலிருந்து பங்கேற்கும் 3000 வாலிபர்கள் ஆசீர்வதிக்கப்படவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் 3 மாநிலங்களில் நடைபெற உள்ள சபை மூப்பர்கள் கூடுகை மற்றும் 4000 பேர்களுக்கு நடைபெற உள்ள சபை தரிசனக் கூடுகைக்காக சிறப்பாக ஜெபியுங்கள். அக்டோபர் மாதத்தில் நடைபெற உள்ள Mission Sunday - 2012, இவ்வருடம் மிகவும் ஆசீர்வாதமாக அமைய ஜெபியுங்கள்.
- மேலும் டெல்லியில் நடைபெற உள்ள விஷன் இந்தியா – 2012 (அக்டோபர் 24–27) வாலிபர் முகாமிற்காக ஜெபியுங்கள். அனைத்து வட இந்திய மாநிலங்களிலிருந்து சுமார் 10,000 வாலிபர்களும், ஷாலோம் திருச்சபைகளிலிருந்து சுமார் 300க்கும் அதிகமான வாலிபர்களும் பங்கேற்க உள்ளனர். அதற்கான ஆயத்தங்களுக்காக ஜெபியுங்கள். இதனைப்

பொறுப்பேற்று நடத்தும் விஷன் இந்தியா –விற்காகவும், அந்த முகாமில் சிறப்பு செய்தியளிக்க அழைக்கப்பட்டுள்ள அடியேனுக்காகவும் ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன்.

- ✞ கர்த்தருக்கு சித்தமானால் செப்டம்பர் மாதம் புதிய ஊழியர்களுக்கான Interview வைக்க இருக்கிறோம். தேவன் புதிய ஊழியர்களை எழுப்பித்தர ஜெபியுங்கள். தேவ கிருபையால் 3 மாநிலங்களில் நடைபெற்று வரும் ஆலய கட்டுமானப் பணிகளுக்காக, குறிப்பாக இராஜஸ்தான் மாநிலத்தில் கோய்க்காவில் நடைபெறும் சிறப்பு ஆலயக் கட்டுமான பணிக்காக ஜெபியுங்கள்.
- ✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் தாகோத் பணித்தள அலுவலகம், முன்னேற்றப் பணிகள் மற்றும் ஷாலோம் சேரிட்டி மிஷன் பணிகள், பணித்தளத்தில் நடைபெறும் Compassion Children Projects எல்லாவற்றிற்காகவும் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து செயல்படும் அனைத்து தேவ ஜனங்களையும் தேவன் ஆசீர்வதிக்க அனுதினமும் ஜெபியுங்கள்.
- ✞ அடியேனுக்காகவும், எனது மனைவி வஹிதாவிற்காகவும் ஜெபியுங்கள். தேவன் நல்ல சுகத்தையும், பெலத்தையும் குறிப்பாக ஆவியானவரின் வழிநடத்துதலின்படியும் ஊழியங்களை நடத்திச் செல்ல ஜெபியுங்கள். ஷாலோம் ஊழியங்களுக்கான திரளான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
- ✞ எங்கள் அன்பு மகன் **டைட்டஸ் – மெர்லின்** ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் கல்வி, சுகாதாரம், தண்ணீர் மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பில் தேவன் அவர்களை பயன்படுத்த ஜெபியுங்கள். அதுபோல் மீடியா துறையில் பொறுப்பேற்று செயல்பட்டுவரும் **ஷாலோம்–** க்காகவும் ஜெபியுங்கள். இந்த துறையின் மூலமாக அநேக ஆடியோ, வீடியோ சி.டி–க்கள் உருவாக்கப்பட்டு சபைகள் ஸ்திரப்படவும், முன்னேற்றப் பணிகள் விரிவடையவும் ஜெபியுங்கள். எங்களது அன்பு மகள் **ஜாய் ஷெக்கினா** வரும் 09.09.2012 அன்று தனது 3வது வருட மருத்துவ படிப்பிற்காக ரஷ்யாவிற்கு புறப்பட்டுச் செல்கிறாள். இந்த கல்வியாண்டில் தேவன் அவளுக்கு நல்ல சுகம், பெலனும், படிப்பதற்கு ஞானத்தையும் குறிப்பாக தேவனுடைய பாதுகாவலில் வளர ஜெபியுங்கள்.

நாங்களும் குடும்பமாக, சபையாக, ஊழியர்களாக, உங்களுக்காகவும், உங்கள் குடும்பங்களுக்காகவும், ஊழியங்கள் மற்றும் சபைகளுக்காகவும், உங்கள் சந்ததியை தேவன் ஆசீர்வதிக்கவும் கருத்தாக ஜெபிக்கிறோம். தேவன் தாமே உங்களை அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

***“நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கீரிடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்” ஏசாயா 62 : 3.***

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(பேராயர் **V.** தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**

# “நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்”

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

ஆதியிலே தேவன் ஆதாம் ஏவாளை படைத்து அவர்களுடன் உறவாடினார். பாவத்தின் விளைவாக, நேரடியான அந்த ஏதேன் தோட்ட உறவு அற்றுப் போனாலும் தேவன் தாம் வைத்த அன்பின் நிமித்தமாய், அந்த மாபெரும் உறவை புதுப்பித்து தம் ஜனங்களுடன் உறவாடினார். ஏனோக், நோவா, ஆபிரகாம் என அநேக பிதாக்களின் வாழ்க்கையில் அதை நாம் காண்கிறோம். அதைத் தொடர்ந்து, தேவன் பூமியிலுள்ள சர்வ ஜனங்களை ஆசீர்வதித்து ஆபிரகாமை தெரிந்துகொண்டு இஸ்ரவேலை தமக்காக தெரிந்தெடுத்தார்.

ஆங்காங்கே தேவ நடத்துதலின்படி, கூடாரங்களைக் கட்டி தொழுது கொண்ட தேவ ஜனங்களுக்கு தேவன் தம் பிரசன்னத்தை வெளிப்படுத்த ஆசாரிப்புக் கூடாரத்தை கொடுத்தார். அதைத் தொடர்ந்து, தேவன் தாவீதின் குமாரன் சாலமோன் மூலமாக தேவாலயத்தைக் கட்டி எழுப்பி அதின் மூலமாக ஜனங்களுடன் உறவாடினார். மறுபடியும் தேவனுக்கு விரோதமான பாவங்கள், அக்கிரமங்கள் எல்லாம் தேவபிரசன்னத்தை தேவாலயத்தில் இழக்கச் செய்தது.

இருப்பினும், பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தேவன் தம் ஜனங்களிடம் குறிப்பாக இஸ்ரவேலிடம் “நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்” என்று எரேமியா 30:22ல் குறிப்பிட்டுள்ளார். புதிய ஏற்பாட்டில், இயேசு கிறிஸ்து சாலமோன் தேவாலயத்தைக் காட்டிலும் பெரியவராக இருக்கிறார் என்ற விளக்கினார். இயேசு கிறிஸ்து தம் விலையேறப் பெற்ற இரத்தத்தால் தம் சொந்த ஜனங்களை இரட்சித்து, **“ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.”** என்று அப் 20:28ல் காண்கிறபடி, தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்து கொண்ட தமது சபை என்று ஆவியானவர் விளக்குகிறார்.

பரிசுத்த பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது **“நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்” – 1** கொரி 3 :16,17. பவுல் அடியார், தேவனுடைய ஆலயத்தைக் குறித்து, அதாவது நம்மை குறித்து முதலாவதாக **“நீங்களே அந்த ஆலயம்”** என்று 1 கொரிந்தியர் 3:17ல் கூறுகிறார்.

தேவன் தம் ஜனங்களை குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தினால் அதாவது சுய இரத்தத்தினால் சம்பாதித்த சபை என விளக்கம் தருகிறார். இந்நாட்களில் நாம் மிகப்பெரிய ஆலயங்களை கட்டிடமாக கட்டி வருகிறோம். கோபுரங்களை உருவாக்கி வருகிறோம். நாங்களும் ஷாலோம் ஊழியத்தில் முதலாவது சிறிய கிராம ஆலயங்களையே 20 வருடங்களுக்கு முன்பாக கட்டினோம். இப்போது அழகான பெரிய ஆலயங்களை கட்டிடமாக கட்டி வருகிறோம். ஆலயம் என்று சொன்னபோது தேவன் கட்டிடங்களை குறிப்பிடவில்லை. தேவ ஜனங்களை அவர் வாஞ்சிக்கிறார். நாம் தேவனை கூடி ஆராதிப்பதற்காக கட்டிடங்களை தேவன் தருகிறார். அது ஆராதனைக்குரிய பரிசுத்த இடமாக உள்ளது. தேவ ஜனங்கள் கூடுகைக்காக அது மிகவும் அவசியமே. அப்படித்தான் சாலமோன் ராஜாவும் தேவாலயத்தைக் கட்டி எழுப்பினான். தேவாதி தேவனும் மகிமையாக இறங்கி வந்தார். ஆனால் காலங்கள் கடந்த போது, அதை அந்நியர்கள் முற்றுகையிட்டார்கள். அங்கு தேவமகிமை இறங்கவில்லை. ஏனெனில் தேவ ஜனங்களும், ஆசாரியர்களும் தேவனை விட்டு வழி விலகிப் போனார்கள்.

வேதம் சொல்கிறது, நாமே தேவனுடைய ஆலயம் என்று. ஆகவே, தேவன் நம்மிடத்தில் பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார். தேவனுடைய ஆலயமாகிய நாம் தேவனை பரிசுத்தத்துடன் தொழுது கொள்ள வேண்டும். நீங்கள் எனக்கு பரிசுத்தமுள்ள ஜனம் என்று தேவன் விளம்புகிறார். பரிசுத்தமில்லாமல், தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் வாழும்போது நாம் தேவனுடைய ஆலயத்தைக் கெடுக்கிறோம். ஆகவே, தேவனுடைய ஆலயத்தில் நாம் தேவனை தொழுதுகொள்ளும் ஒவ்வொரு வேளையும், ஆராதனை செய்யும் கட்டிடத்தை அல்ல, ஆனால், நமக்குள் வாசம் பண்ண விரும்புகிற தேவ ஆவியானவரையே நாம் தொழுதுகொள்ளவேண்டும். நான் தேவனுக்கு பரிசுத்தமான ஆலயமாக விளங்குவேன் என்ற அர்ப்பணத்துடன் நாம் ஒவ்வொருவரும் அவரை ஆராதிப்போமாக, தொழுது கொள்வோமாக.

**தேவனுடைய ஆலயம் முழுமையான சரீரத்திற்கு ஒப்பாக உள்ளது**

எபேசியர் 4:15,16 மற்றும் 1 கொரிந்தியர் 12:12,27 இந்த வசனங்களை வாசித்துப் பாருங்கள். சபை முழுசரீரத்திற்கு ஒப்பாக உள்ளது. கிறிஸ்து அதற்கு தலையாக இருக்கிறார். நாம் அனைவரும் ஒவ்வொரு அங்கங்களாக இருக்கிறோம். எப்படி சரீரத்தில் அநேக அவயவங்கள் உள்ளதோ, அதுபோல நாமும் இருக்கிறோம். சரீரத்தில் அனைத்து உறுப்புகளும் இணைந்து செயல்பட வேண்டும். ஒவ்வொருவருக்கும் தேவன் தனித்தனி மகிமையையும், வேலைகளையும் கொடுத்துள்ளார். ஆகவே நாம் சபையில் இணைந்து வாழும் போது ஒரே சரீரத்தைபோல் பல அவயவங்களாக காணப்பட்டாலும் ஒருமனமாக வாழவேண்டும், ஊழியம் செய்யவேண்டும், சாட்சிகளாய் விளங்கவேண்டும். எபேசியர் 4ம் அதிகாரத்தில் காணப்படும் 5 வகையான ஊழியங்கள், 9 வரங்களும் இணைந்து செயல்பட வேண்டும். அனைத்தும் தலையாகிய கிறிஸ்துவுக்குள் இணைந்து அவர் தலைமைத்துவத்தில் செயல்ப்பட வேண்டும்.

**தேவனுடைய சபை ஒரு கட்டிடத்திற்கு ஒப்பாக உள்ளது**

"ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்க்ள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்." எபேசியர் 2:19–22. வேதம் சொல்லுகிறது இன்றைக்கு காணும் நம்முடைய சபையில் மூல காரணங்களை மறக்ககூடாது. இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாக அடிக்கப்பட்டுள்ளார். அவர் பாடுகள், சிலுவையில் அவர் தியாகம், தம் பரிசுத்த இரத்தத்தை சிந்தி சுய இரத்தத்தினால் சபையை மீட்டு சம்பாதித்தார். இயேசுகிறிஸ்து சபையை எவ்வளவு அன்புக் கூர்ந்தார் என்பதை நினைவுகூர வேண்டும். கிறிஸ்துவே சபைக்கு மூலைக்கல், மட்டுமின்றி அப்போஸ்தலர், தீர்க்கத்தரிசிகள் வரிசையில் மிஷனெரிகள் அஸ்திபாரமாக இருக்கிறார்கள். இன்று காணும் சபைகளுக்கு, அன்று 12 அப்போஸ்தலர்கள் இரத்தசாட்சிகளாக ஜீவனை தந்தார்கள். சபை முற்பிதாக்கள் தங்கள் ஜீவனை ஊற்றினார்கள். மிஷனெரிகள் இரத்த சாட்சிகளாய், தங்கள் ஜீவனை வாழ்ந்து கோதுமைமணிகளாக மாறி அஸ்திபாரமாக உருவாக்கப்பட்டார்கள்.

இன்று நாம் அதன்மேல் கூட்டிகட்டப்பட்டு வருகிறோம். சபைக்கு நாம் அதிகாரிகள் அல்ல. சபை நம்முடைய சொத்து அல்ல. மூலைக் கல்லான இயேசுவையும்; அஸ்திபாரமாக தங்களை தேவன் தந்த அப்போஸ்தலர்கள், தீர்க்கத்தரிசிகள், மிஷனெரிகளை நினைவுகூறுவோம். மட்டுமல்லாமல் ஸ்தல சபைமட்டுமல்ல, உலகமெங்குமுள்ள திருச்சபையாக நாம் கூட்டி கட்டப்பட்டுவருகிறோம். அனைத்து சபைகள், ஆலயங்கள், ஊழியங்கள் நாம் நேசித்து கூட்டி கட்டப்படும் கட்டிடமாக எழும்பி தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

**தேவனுடைய சபை தொழுவத்திற்கு ஒப்பாக உள்ளது**

யோவான் 10ம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள். தேவனுடைய சபை தொழுவத்திற்கு ஒப்பாக உள்ளது. நாம் விசுவாசிகள் யாவரும் ஆடுகளாகவும்; தேவன் சபையை மேய்க்க மேய்ப்பர்களை (போதகர்களை) மற்றும் கண்காணிகளையும் எழுப்பி உள்ளார். ஆடுகளை சரியான பாதையில் மேய்க்கவும், போதித்து வழிநடத்தவும், பராமரிக்கவும், பாதுகாக்கவும் மேய்ப்பனை வைத்துள்ளார். ஆடுகளாகிய விசுவாசிகள் மேய்ப்பரின் சத்தத்தைக் கேட்டு, மேய்ப்பனுக்கு பின் செல்லவேண்டும். மேய்ப்பர்கள் தங்கள் பொறுப்பை சரியாக உத்திரவாதத்துடன் செய்து முடிக்கும்போது, நல்ல மேய்ப்பனும் பிரதான மேய்ப்பனுமாகிய இயேசு கிறிஸ்து வரும்போது ஜீவ கிரீடத்தை தருவார். "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச்

செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்." – யோவான் 10:16. தொழுவமாகிய சபைக்கும், மேய்ப்பருக்கும் அனைவருக்கும் ஒரு பொறுப்பை தருகிறார். தொழுவத்தில் கட்டப்படாத அநேக ஆயிரம், இலட்ச ஆத்துமாக்களை கொண்டு வர வேண்டும் என்பது பிரதான மேய்ப்பனின் சித்தமும், வாஞ்சையும், பாரமாகும். ஸ்தல சபையாக சுற்றிலுமுள்ள கிராமங்கள், ஆத்துமாக்களை தொழுவத்திற்கு கொண்டுவர வேண்டும். தூரக் காட்சியுடன் சந்திக்கப்படாத ஜாதிகள், பாஷைகாரர்கள் தேசத்தார் அனைவரும் இரட்சிக்கப்பட நற்செய்திபணியாளர்களை அனுப்ப, தாங்க, ஜெபிக்க முன்வர வேண்டும். தேசம் தேவனை அறியும்!

**தேவனுடைய சபை மணவாட்டிக்கு ஒப்பாக உள்ளது**

**"யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது."** – வெளி 21:2. வேதபுத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் சபை ஒரு மணவாட்டிக்கு ஒப்பாக கூறப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின்போது மணவாட்டியாகிய சபை அலங்கரிக்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட வேண்டும். வெளி 21:24,27 –ன்படி இரட்சிப்படுகிற ஜனங்கள், ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் பிரவேசிப்பார்கள். சபையில் பல வருடங்கள் அங்கத்தினராக இருப்பதாலோ, கிறிஸ்துவ குடும்பத்தில் பிறந்தபடியாலோ, அதிகமான காணிக்கை கொடுத்தபடியாலோ, உயர் பொறுப்புகளை வகித்தப்படியாலோ அல்ல, பாவமன்னிப்பு பெற்று, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் கழுவப்பட்டு ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மட்டுமே மணவாளனாகிய இயேசு கிறிஸ்து வரும்போது மணவாட்டி சபையாக நாம் அலங்கரிக்கப்பட்டு ஆயத்தமாய் இருப்போம்.

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்! அல்லேலுயா!**

ஜெபியுங்கள்! | பங்கு பெறுங்கள்!!

` ôúXôm ETYôN ù_Tm &
Yôd Ï jRjR BºoYôRd áÓû L

| | |
|---|---|
| நாள் : **01.09.2012 (சனிக்கிழமை)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்**, பாளையங்கோட்டை

## *ஞாயிறு துதி ஆராதனை – CSI கிறிஸ்து ஆலயம் பண்ணை விளை*

**29.07.2012** ஞாயிறு அன்று காலை பண்ணைவிளை, CSI சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு துதி ஆராதனையை நமது ஷாலோம் குழுவினர் நடத்த தேவன் கிருபை செய்தார். பாடல் மற்றும் ஆராதனை வேளைகளை **சகோ. ஆலன்** அவர்கள் நடத்தினார்கள். பணித்தளத்திலிருந்து வந்திருந்த நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. தும்சிங் புரியா (மன்கா, ம.பி.)** அவர்கள் தனது சாட்சிக் கூறி, ஒரு பாடல் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். சுதேச ஊழியரின் சாட்சியினை மொழியாக்கம் செய்து, ஷாலோம் ஊழியங்களைக் குறித்து **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் தேவ செய்தியினை பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த வாய்ப்பினை வழங்கிய சேகரகுரு **Rev. P. ஜெபவாசகம்** அவர்களுக்காகவும், சபை அங்கத்தினர் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

---

## *மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை*

**29.07.2012** ஞாயிறு அன்று மாலை **6.00** மணிக்கு தெற்கு தாமரைகுளம், நாகர்கோவிலில் வைத்து, நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. தும்சிங் புரியா** (மன்கா, மத்தியபிரதேசம்) அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த ஆராதனையில் ஷாலோம் ஊழியர் **சகோ. ரதீஸ் குமார்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்தினார்கள். சுதேச ஊழியரின் சாட்சியினை மொழியாக்கம் செய்து, ஷாலோம் ஊழியங்களைக் குறித்து **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் தேவ செய்தியினை பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த ஊழியரைத் தாங்க முன் வந்த **இம்மானுவேல் ஜெபக் குழுவிற்காகவும், CSI ஆலயத்திற்காகவும் (தெற்கு தாமரைக்குளம்)** தேவனைத் துதித்து நன்றி கூறுகின்றோம். தேவனுக்கே மகிமை!

---

## *வட இந்திய உபவாச கூடுகை*

**01.08.2012** புதன் அன்று காலை **11.30** மணிக்கு நாசரேத், ஜோதி மஹாலில் வைத்து வட இந்தியாவிற்காக உபவாச கூடுகை நடைபெற்றது. இந்தக் கூடுகையில் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ஆலன் எல்விஸ்** மற்றும் **சகோ. ரதீஸ் குமார்** ஆகியோர் கலந்து கொண்டு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். இந்தக் கூடுகையில் விசேஷமாக வட இந்தியாவிற்காக பாரத்துடன் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. இந்த கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்த **Rev. ராஜாசிங்** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

# ஜெபக்குறிப்புகள்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

◎ 600க்கும் அதிகமான ஆராதனை குழுக்களுக்காக, 240க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் கூடுகைகளுக்காக ஜெபியுங்கள்.

◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் மற்றும் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வெள்ளிதோறும் நடைபெற்றுவரும் அற்புத உபவாச கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

◎ எங்களது மகன்கள் **டைட்டஸ், ஷாலோம்** மற்றும் ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் **சகோதரி ஷெக்கினா** அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

◎ 485க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாக பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

◎ Compassion Projcet மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

◎ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் பணித்தளத்தில் பீல் மக்களுக்கு தேவன் நல்ல விளைச்சலைத் தர...**

- ◎ நமது பீல் மக்கள் வாழும் பகுதியில் தேவன் நல்ல மழையைத் தந்துள்ளார், அதற்காக தேவனைத் துதிப்போம்.. மேலும் தேவன் அவர்களை விவசாயத்தின் மூலமாக ஆசீர்வதிக்கவும், பொருளாதாரத்தில் உயர்த்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் கிராம ஆலயங்கள்...**

- ◎ கர்த்தருக்கு சித்தமானால், இவ்வருட இறுதிக்குள், 100 ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள். கிராம சபைகள் கட்ட அனுமதிகள் சரியாக கிடைக்கவும், கட்டுமான வேளையில் எதிர்ப்புகள் நீங்கவும், தேவையான நிதி உதவி கிடைக்கப் பெறவும், ஸ்தலசபைகள் உற்சாகமான காணிக்கை தந்து உதவிபுரியவும் ஜெபியுங்கள்.

**ஆதரவாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காக...**

- ◎ ஷாலோம் ஊழியங்களை ஜெபித்துத் தாங்கிவரும், மிஷனெரி ஆதரவாளர்கள், குழந்தை ஆதரவாளர்கள், கிராம ஆதரவாளர்கள், ஆலயக் கட்டுமான ஆதரவாளர்கள், ஷாலோம் பங்காளர்கள் மற்றும் அநேக காரியங்களை அவ்வப்போது தாங்கிவரும் ஆதரவாளர்கள், மாதந்தோறும் தங்களால் இயன்ற காணிக்கைகளைக் கொடுத்து ஊழியங்களைத் தாங்கி வரும் ஆதரவாளர்கள் அனைவரையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
- ◎ ஆதரவாளர்கள் செய்கின்ற வேலைகள், தொழில்கள், வியாபாரங்கள் மற்றும் ஊழியங்கள் அனைத்தையும் தேவன் ஆசீர்வதிக்கவும், தேவைகளை சந்திக்கவும், பொருளாதார பிரச்சினைகள் மாறவும், வீட்டில் சந்தோஷம், சமாதானம் நிலவவும் அவர்கள் பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
- ◎ ஆதரவாளர்களில் தேவைகளோடு காத்திருப்போருக்காகவும், வேலைக்காக காத்திருப்போருக்காகவும், திருமணத்திற்காக காத்திருப்போருக்காகவும், குழந்தைச் செல்வங்களுக்காகக் காத்திருப்போருக்காகவும், பொருளாதாரத்தில் கஷ்டப்படுவோருக்காவும் ஜெபியுங்கள்.
- ◎ ஷாலோம் ஊழியங்களைத் தாங்கிவரும், ஊழிய ஸ்தாபனங்களுக்காகவும், சபைகளுக்காகவும், ஜெபியுங்கள். ஊழியங்களில் பெரிய அறுவடையை தேவன் கொடுக்கவும், ஊழியத் தேவைகளை சந்திக்கவும் அவர்கள் சபைகளை தேவன் கட்டவும் ஜெபியுங்கள்.
- ◎ நமது ஊழியங்களுக்காக காணிக்கைகளை சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காகவும், ஊழியங்களை ஜெபங்களினாலும், ஆலோசனைகளினாலும் தாங்கிவரும் செயற்குழு உறுப்பினர்களுக்காகவும் அவர்கள் குடும்பங்களுக்காவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களில் வரும் தடைகள் நீங்க...**

◎ ஊழியங்கள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக வரும் மனுஷீக வல்லமைகள், எதிர்ப்புகள், போராட்டங்கள் மேலும் அந்தகாரத்தின் கிரியைகள், விரோதமாக செயல்படும் அதிகாரங்கள் நீங்கவும் ஊழியர்களுக்கு தேவன் நல்ல பாதுகாவலைத் தரவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்...**

◎ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர் வசதிகளுக்காவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

◎ ஷாலோம் பள்ளிக் கூடங்களுக்கு நல்ல வசதியான கட்டிடங்கள் கிடைக்கப் பெறவும், பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறவும், இந்த உலகிற்கு ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள்.

◎ ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 950க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும் சுகம் பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

◎ விடுதிக் காப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காவும், புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் பிள்ளைகளுக்குத் தேவையான அனைத்துக் கல்வி பொருட்களுக்கான தேவைகளை தேவன் சந்திக்கும்படியாக ஜெபியுங்கள்.

◎ Teacher Training, Engineering, Medical & ITI போன்ற உயர்கல்வி கற்றுவரும் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.

◎ எதிர்காலத்தில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு தேவன் நல்ல வேலை வாய்ப்பினைத் தந்து சமுதாயத்தில் உயர்த்தி ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**எதிர்காலத் திட்டங்களுக்காக...**

◎ 3 மாநிலங்களிலும் 3 திருமண்டலமாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியே பேராயர்கள் ஏற்படுத்தப்படவும், சபை ஒழுங்குகள் சரிவர செய்யப்படவும் ஜெபியுங்கள்.

◎ தேவனுக்கு சித்தமானால், 2015க்குள், 1000 திருச்சபைகள் மற்றும் 1000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும், 10 இலட்ச ஆத்துமாக்கள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

◎ பணித்தள அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகக் கட்டிட விரிவாக்கத்திற்காக ஜெபியுங்கள்.

◎ ஊழியர்கள் கூட்டங்கள் மற்றும் இதர முகாம்கள் நடத்த வசதியான Meeting Hall கட்டப்பட ஜெபியுங்கள்.

◎ தேவனுக்குச் சித்தமானால், ஆடியோ, வீடியோ படப்பிடிப்பு மற்றும் எடிட்டிங் பண்ணக்கூடிய அளவிற்காக சாதனங்கள் வாங்கப்பட்டு வீடியோ ஆடியோ நிலையங்கள் உருவாக்கப்பட தேவையான நிதி உதவி மற்றும் அதற்கேற்ற ஊழியர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

# தேவன் ஆசீர்வதித்த திருமணம்

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி உங்கள் அனைவரின் அன்பான ஜெபங்களினாலும், அசீர்வாதங்களினாலும் எங்கள் அன்பு மகன் **டைட்டஸ் – மெர்லின்** திருமணம் தேவநாமம் கிமைப்பட வெகு சிறப்பாக **06.08.2012** திங்கட்கிழமை அன்று தூத்துக்குடி, கால்டுவெல்நினைவு தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. இவ்வாராதனையில் **Rt. Rev. Dr. J.A.D. ஜெபசந்திரன்** **(** தூத்துக்குடி **–** நாசரேத் திருமண்டலப் பேராயர்), R**t. Rev. Dr. J.J. கிறிஸ்துதாஸ்** (திருநெல்வேலி திருமண்டலப் பேராயர்), **Rt. Rev. Dr. ஜெயபால் டேவிட்** (ஓய்வு பெற்ற திருநெல்வேலி திருமண்டலபேராயர்) ஆகியோர் தலைமையில் தூத்துக்குடி C.S.I. திருமண்டல போதகர்கள் மற்றும் ஷாலோம் திருமண்டல **31** போதகர்கள் மற்றும் பல திருச்சபை போதகர்கள், ஊழியர்கள், தேவ ஜனங்கள் கலந்து மணமக்களை ஆசீர்வதித்தார்கள்.

நம் அன்பு **சகோ. மோகன் சி. லாசரஸ்** (இயேசு விடுவிக்கிறார்) அவர்கள் தலைமையில் தூத்துக்குடியிலுள்ள அபிராமி மஹாலில் வைத்து திருமண வரவேற்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. அனைத்து தேவ ஊழியர்களும், போதகர்களும் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான தேவ ஜனங்களும் **டைட்டஸ் – மெர்லினை** வாழ்த்தி ஆசீர்வதித்தது மட்டுமன்றி இருவரையும் ஷாலோம் ஊழியத்தில் பீல் மக்களின் அசீர்வாதப் பணிக்காக பிரதிஷ்டை செய்தபோது தேவ நாமம் மகிமைப்பட்டது. திருமண ஆராதனையிலும், வரவேற்பு நிகழ்ச்சியிலும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை அனைவரும் உணர்ந்தோம். கலந்து கொண்ட யாவரும் தேவனைத் துதித்தார்கள். **"ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதவானவர் கனம் பண்ணுவார்" யோவான் 12:26** என்ற வாக்கின்படி தேவன்தாமே ஒரு குறைவின்றி நிறைவாக அனைத்தையும் நடத்தி தந்தார்.

அதை தொடர்ந்து **16.08.2012** வியாழன் அன்று குஜராத் ஷலோம் சபைகள் சார்பில் சிறப்பு வரவேற்பு நடைபெற்றது. அதில் சுமார் **2000**க்கும் அதிகமானோர் பங்குபெற்றார்கள். **17.08.2012** வெள்ளிக்கிழமை அன்று மத்தியபிரதேசம் அந்தர்வேலியாவில் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் **4000**க்கும் அதிகமானோர் கலந்துக் கொண்டனர். **18.06.2012** சனிக்கிழமை அன்று இராஜஸ்தானில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் **2500**க்கும் அதிகமானவர்கள் பங்குபெற்றனர்.

மழைக்காலமானபடியினால் எல்லா இடங்களிலேயும் மழை பெய்துக் கொண்டிருந்தது. ஆனாலும் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறும் நாட்களில் மழை இல்லாதபடி தேவன் அற்புதத்ததை நடத்தினார்.

Tent போட்டவர்கள், Video எடுத்தவர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள், சுற்றி உள்ளவர்கள் யாவரும் **“தேவன் இவர்களுடன் இருக்கிறார், இவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்”** என்று தேவனை மகிமைப்படுத்தினார்கள். இம்மூன்று நாட்களும் மூன்று மாநிலத்தில் உள்ள அனைத்து ஷாலோம் சபை போதகர்கள், ஊழியர்கள், மூப்பர்கள் மட்டுமன்றி C.N.I சபை அங்கத்தினர்கள், Salvation Army, Philadelphia, IMS, Visuvavani போன்ற மற்ற மிஷனெரி ஸ்தாபன மிஷனெரிகள், ஊழியர்கள், பிற மதத்தினர்கள் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்தார்கள்.

குறிப்பாக குஜராத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் Bible Society of India, Ahamadabad–லிருந்து அனைவரும் **Rev. Nicholas Parmar** அவர்கள் தலைமையில் வந்து வாழ்த்துக் கூறினார்கள். மேலும், குஜராத் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திலிருந்து **Mr. Bhavesh** அவர்கள் குடும்பமாக வந்து மணமக்களை வாழ்த்தினார்கள். மத்தியபிரதேசத்தில் ஜாபுவா மாவட்ட MLA சேவியர் மேடா அவர்கள் வந்து மணமக்களை வாழ்த்தியது குறிப்பிடத்தக்கது. மேலும் இராஜஸ்தானில் **Pas. George Mathews, Bangalore** அவர்கள் கலந்துக் கொண்டு கேக் வெட்டி வாழ்த்துரை கூறினார்கள்.

மூன்று மாநிலத்திலும் ஷாலோம் போதகர்கள் வரவேற்பு நிகழச்சியில் சிறப்பு வாழ்த்துரை கூறி பெரியமலர் மாலைகளை அணிவித்து சிறப்பு வெகுமதிகளை அளித்து 23 வருட ஷாலோம் பணிகளுக்காக, பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக, அதனை தொடர்ந்து தேவன் இணைந்த **டைட்டஸ்–மெர்லின்** குடும்பத்திற்காக துதித்து ஜெபித்தார்கள். சிறப்பு கலாச்சார நடனங்களுடன் சிறுவர், சிறுமிகளின் சிறப்பு நடனங்களும் பாராட்டத்தக்க வகையில் அமைந்தது. மெர்லின் குடும்பத்தார் 7 பேர்கள் தமிழ்நாட்டிலிருந்து வரவேற்பு நிகழ்ச்சியில் பங்குபெற்றார்கள். மிகுந்த ஆனந்ததுடன் ஊழியங்களுக்காக தேவனை துதித்தார்கள். 3 நாட்களும் வந்த அனைவருக்கும் சிறப்பான வகையில் விருந்து வழங்கப்பட்டது. எல்லா துதி கனம் மகிமை தேவனுக்கே செலுத்துகிறோம்.

தொடர்ந்து **டைட்டஸ்–மெர்லின்** குடும்பத்தார் இந்த மாத முதல் ஷாலோம் சேரிட்டி மிஷனில் பீல் ஆதிவாசிமக்கள் மத்தியில் மாணவர்களின் கல்விபணி, மருத்துவம், குடிநீர் மற்றும் மேம்பாட்டு திட்டங்களை நிறைவேற்ற தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். குறிப்பாக முதல்கட்டமாக 10,000 ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வி புகட்டவும், அவர்கள் சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக விளங்கவும், அநேக ஷாலோம் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைகழகம் ஆகியவற்றை மூன்று மாநிலங்களில் எழுப்பப்படவும், இலட்சங்களுக்கு மட்டுமல்ல, கோடிகளுக்கு ஆசீர்வாதமாக விளங்கவும் அர்பணித்த **டைட்டஸ் – மெர்லினுக்காக** அனுதினமும் ஜெபித்து தாங்க திட்டங்கள் நிறைவேற்ற முன்வாருங்கள். **தேவனுக்கே மகிமை !**

## டைட்டஸ் மெர்லின் திருமண வரவேற்பு - குஜராத், மத்தியப்பிரதேசம் & இராஜஸ்தான் (ஆகஸ்ட் - 16,17&18-2012)



கலாச்சார வரவேற்பு – இராஜஸ்தான்



மணமக்கள் வரவேற்பு வைபவம்



Cake Cuttiog



இந்திய வேதாமச் சங்கம் – குஜராத்



Pr. டேனியல் & குழுவினர், மும்பை



ஜாபுவா மாவட்ட MLA. சேவியர் மெய்டா அவர்களுடன் மணமக்கள்



குஜராத் போதகர்களின் சார்பில் வரவேற்பு



இராஜஸ்தான் போதகர்களின் சார்பில் வரவேற்பு



மத்தியப்பிரதேசம் போதகர்களின் அன்பளிப்பு

# டைட்டஸ் - மெர்லின் திருமணம் - 06.08.2012



திருமண ஊர்வலம்



திருமண ஆராதனை –
CSI கால்டுவெல் நினைவு ஆலயம்



Rt,Rev.Dr. J.A.D. ஜெபச்சந்திரன்,
Rt,Rev.Dr. J.J. கிறிஸ்து தாஸ்,
Rt,Rev.Dr. S. ஜெயபால் டேவிட்
ஆகியோருடன் மணமக்கள்



மணமக்களை ஆசீர்வதித்து ஜெபிக்கும்,
சேகர குரு Rev. சாமுவேல் செல்வராஜ்



மணமக்கள்



திருமண ஒப்பந்தம்



ஆராதனை வேளை – சகோ. ஆல்வின் தாமஸ்



சிறப்புச் செய்தி – சகோ. மோகன் சி. லாசரஸ்



மணமக்கள் பிரதிஷ்டை ஜெபம் – சகோ. G.P.S. ராபின்சன்



நிகழ்ச்சி தொகுப்பு – Pr. ஞான சேகர்



ஊழிய பகிர்வு – Prof. C.S. கிறிஸ்டோபர்



Cake Cutting - சகோ. ஜெல் ஜோசப் தம்பதியினர்





மணமகன் மற்றும் மணமகள் குடும்பத்தினர்



பீல் சுதேச ஊழியர்களின் கலாச்சார நடனம்



வருகை தந்த தேவ ஜனங்கள்

## டைட்டஸ் மெர்லின் திருமண வரவேற்பு - குஜராத், மத்தியப்பிரதேசம் & இராஜஸ்தான் (ஆகஸ்ட் - 16,17&18-2012)


மணமகன் குடும்பத்தார்


மணமகள் குடும்பத்தார்


குஜராத் சிறுவர்களின் நடனம்


CDC ஜெரி (குஜராத்) சிறுமிகளின் நடனம்


மத்தியப்பிரதேசம் சிறுமிகளின் நடனம்


இராஜஸ்தான், பிஜல்பூர் பள்ளி மாணவர்களின் நடனம்



ஆலயத்தின் உள்ளே மற்றும் வெளியே கூடியிருந்த விசுவாசிகள்


உணவு பரிமாறும் வேளை

# ஆத்தும வேட்டை



சகோ. J. *அற்புதராஜ் மார்காஷிஸ்*

மனிதனின் ஆள் தத்துவத்தில் ஆவி, ஆத்துமா, சரீரம் என மூன்று பிரிவுகள் உண்டு. இந்த மூன்றும் சேர்ந்ததுதான் ஒரு மனிதன். நாம் காணும் சரீரம் அநித்தியமானது, அழிவுக்குரியது. மண்ணானது அது மண்ணிற்கே திரும்பும். **“நாம் மண் என்று நினைவு கூறுகிறார்.”** சங். 103:14 ஆனால் இந்த சரீரத்திற்குரியவைகளுக்கே நாம் நம் வாழ்நாளில் அதிக அக்கறை கொள்ளுகிறோம். அதற்கே அதிக முக்கியத்துவம், அதிக நேரம், அதற்குரியவைகளையே செய்கிறோம்.

ஆத்துமா விலையேறப்பெற்றது. **“மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை (ஆத்துமாவை) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?”** மாற்கு (8:36). **“ஆத்துமா”** உலகத்தைவிட விலையேறப்பெற்றது. நித்தியத்திற்குரியது. **நித்திய காலமாய் இயேசுவோடு வாழும்**, அல்லது **நித்திய காலமாய் நரகாக்கினை பெறும்.** நாம் ஆண்டவருக்கு விசேஷித்தவர்கள் அல்லவா? அவர் நம்மை இந்த பூமியில் சாதாரணமானவர்களாய்க் கருதவில்லை. ஆதலால் நாம் செய்கிறதும் சாதாரணமானவைகளை அல்ல அசாதாரணமானவைகளே. அதாவது இந்த வாழ்விலே விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண நம்மை வைத்துள்ளார். **“ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்”** நீதி. 11:30

முதலாவது நம்முடைய சொந்த ஆத்துமாவை ஆதாயப்படுத்திக் கொள்வது ஞானமே. அழிந்து போகிற இந்த உலகப்பொருளை சம்பாதிக்க நாம் எவ்வளவு திட்டம் போடுகிறோம். வாழ்வில் அதிக நேரம் செலவு செய்கிறோம். ஆனால் நம்முடைய ஆத்தும காரியங்களில் அக்கறையற்றவர்களாய் இருக்கிறோம். ஆத்தும இரட்சிப்பு விஷேசமானது. சங்கீதக்காரன் **“நான் பாடும் போது என் உதடுகளும், நீர் மீட்டுக் கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்துப் மகிழும்”** சங். 71:23 என்று சொல்லுகிறான். பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்கியேல் 18:4) ஆனால் ஏசாயா கூறுகிறார் : **“உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள், கேளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்”.** (ஏசாயா 55:3).

கர்த்தர் மிகுந்த இரக்கம் கொண்டவர். அவர் எசேக்கியேலைக் கொண்டு பேசுகிறார். **“துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில் அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப் பண்ணுவான்.”** எசே. 18:27 **“இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்”.** (எபி. 2:4 பி.) ஆனால் இன்னும் நாம் **“அறுப்புக்காலம் சென்றது கோடை காலமும் முடிந்தது நாமோ இரட்சிக்கப்படவில்லை”** (எசே. 8:20) என்று சொல்லுவோமோ? இன்றைக்கே அதுவும் இப்பொழுதே மனந்திரும்பி இயேசுவை

ஏற்றுக் கொள்ளுங்கள். இது மிகமிக அவசியம் **"எதை இழந்தாலும் நித்தியத்தை இழந்துவிடக்கூடாது".** ஞானமுள்ளவர்களாய் இருந்து நம் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்ள முதலில் வழி காண்போம்.

நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு பிறருடைய இரட்சிப்புக்காக பாடு பட வேண்டும். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரனை ஸ்திரப்படுத்து என்று பேதுருவிடம் இயேசு சொன்னார் அல்லவா? பிறருடைய ஆத்தும ஈடேற்றத்திற்காக என்ன செய்கிறீர்கள்? (சங். 49:7–9) இந்த உலக வாழ்வில் எத்தனையோ வியாபாரம் செய்து அதிக லாபத்தை சம்பாதிக்கிறோம். ஆனால் எல்லாவற்றிலும் உயர்ந்த மதிப்புடைய ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதுதான் தேவன் நமக்குக் கொடுத்த பெரிய ஊழியமாகும். நமக்கு தாலந்துகளைக் கொடுத்து இதைச் செய்யும்படி கட்டளையிட்டுள்ளார். இயேசு கதரேனரின் கடற்கரையில் ஒரு பிசாசு பிடித்த வாலிபனை குணமாக்கினார். இயேசுவை அவன் சந்திக்கும் முன் கல்லறைத் தோட்டம் தான் அவன் குடியிருப்பு, சங்கிலிகளால் அவனைக் கட்டினாலும் அவைகளை முறித்துப் போடுவான். அவனை அடக்க ஒருவராலும் கூடாதிருந்தது. இரவும் பகலும் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தான். கற்களினால் தன்னை காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு எவ்வித உணர்வுமில்லை. நிர்வாணியாக இருந்தான். எந்தவித வெட்கமுமில்லை. ஆனால் இயேசுவை அவன் சந்தித்தபின் வஸ்திரம் தரித்து, இயேசுவின் பாதத்தண்டையில் உட்கார்ந்து, புத்தி தெளிந்தவனாய்க் காணப்பட்டான். அவனைக் கண்டவர்கள் எல்லாம் ஆச்சரிப்பட்டார்கள். அந்த வாலிபன் இயேசுவோடு நிரந்தரமாக இருக்க விரும்பினான்.

ஆனால் இயேசு அவனைப் பார்த்து **"நீ உன் இனத்தாரிடத்தில், உன் வீட்டிற்குப் போய் கர்த்தர் உனக்கு இரங்கி செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி"** என்றார். அவன் போய் தன்னுடைய சொந்த நாடாகிய தெக்கபோலி முழுவதும் இயேசு சொன்னபடி அறிவித்தான். அவன் அன்றுமுதல் ஆத்தும வேட்டையில் இறங்கினான். அவன் ஒரு ஞானவானாய் விளங்கினான். கர்த்தர் நமக்கு இறங்கிச் செய்த எல்லாவற்றையும் அறிவிக்கும்படியாய் கர்த்தர் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். நாம் என்றைக்காவது இதைச் செய்கின்றோமா? நம் வீட்டாருக்கு இனத்தாருக்கு இதைக் கூறி அறிவிக்கிறோமா? ஆத்தும வேட்டையை முதலில் நம் வீட்டில், பின்பு தெருவில், சபையில், நாம் பணி செய்யும் இடத்தில் சொல்லுவோமா? ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவோம். வாழ்க்கையில் இதை ஒரு இயற்கையான தொழிலாக செய்ய முற்படுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

இயேசு சமாரிய ஸ்திரியினிடத்தில் சில நிமிடங்களே பேசினார். தனித்துப் பேசினார். தன் அந்தஸ்தைப் பார்க்கவில்லை, நல்ல நேரத்தைப் பார்க்கவில்லை. பசியாயிருந்தபோது மத்தியான வேளையில் ஊருக்கு வெளியே கிணற்றண்டையில் சந்திக்கிறார். தனித்தாள் ஊழியத்திற்கு சிறந்த மாதிரியாக இயேசு அந்த பெண்ணை சந்திக்கிறார். அவள் செய்த எல்லாவற்றையும் அவளுக்குச் சொன்னார். அவள் இருதயத்தில் குத்தப்பட்டு, தன் குற்றங்களையெல்லாம் உணர்ந்து இரட்சிப்பை பெற்றாள். உடனே தான் வந்த வேலையை மறந்து குடத்தை கிணற்றருகிலேயே வைத்துவிட்டு தன் ஊருக்குள் சென்று **"நான்**

**செய்தவைகளை எல்லாம் ஒருவர் எனக்குச் சொல்லுகிறார். அவர் கிறிஸ்துதானோ என்று வந்து பாருங்கள்"** என்று கிராமத்து மக்களை அவரிடம் அழைத்து வந்தாள். அந்த கிராமத்து மக்கள் இயேசுவின் உபதேசத்தைக் கேட்டு மேலும் இரண்டு நாட்கள் தங்களோடு தங்கும்படி கேட்டுக்கொண்டார்கள். இயேசுவும் அப்படியே இரண்டு நாட்கள் தங்கி அவர்களுக்கு உபதேசித்தார். அந்த கிராமமே இரட்சிக்கப்பட்டது. ஒரு சாதாரண ஸ்திரீதான் கிராமத்தையே ஆதாயம் பண்ணி மிகுந்த ஞானமுள்ளவளாய் திகழ்ந்தாள்.

நீங்களும் நானும் எத்தனையோ நன்மைகளைப் பெற்றுள்ளோம். எல்லாவற்றையும்விட நாம் நம்முடைய ஆத்தும இரட்சிப்பைப் பெற்று அனுபவிக்கிறோம். எத்தனையோ தாலந்துகள் பெற்று ஆசீர்வாதமாய் இருக்கிறோம். நாம் ஏன் ஆத்தும ஆதாயம் செய்யக்கூடாது. நாள் ஒன்றுக்கு ஒரு ஆத்துமா என்றால் ஒரு ஆண்டிற்கு 365 ஆத்துமாக்கள் நம் கணக்கில் இயேசு வரவு வைப்பார். வாரத்திற்கு ஒரு ஆத்துமா என்றால் 52 ஆத்துமாக்கள், ஒரு மாதத்திற்கு ஒரு ஆத்துமா என்றால் 12 ஆத்துமாக்கள், ஆண்டிற்கு ஒரு ஆத்துமா என்றால் 1 ஆத்துமாவை இயேசு நமது கணக்கில் வரவு வைப்பார். நாம் இன்றுமுதல் ஆத்தும வேட்டையை ஆரம்பிப்போமா? இயேசுவின் களஞ்சியத்தில் கோதுமை மணிகளாக ஆத்துமாக்களைச் சேர்த்து ஆவிக்குரிய வியாபாரம் செய்து விலை மதியாத ஆத்தும லாபத்தை நம் இயேசுவுக்கு சேர்ப்போமா? யாக்கோபு 5:19,20 வாசித்துப்பாருங்கள்.

நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்! ஜானி என்ற ஒரு பையன் இருந்தான் அவன் தனது 11வது வயதில் ஓய்வு நாள் பள்ளியின் ஆசிரியை மூலம் இரட்சிக்கப்பட்டான். அந்த ஆசிரியை அவனிடம் நீ இரட்சிக்கப்பட்டுவிட்டாய் இனி அநேகரை இயேசுவிடம் நடத்தி ஆத்தும ஆதாயம் செய் என்று கூறினார். அவன் ஒரு வருடத்தில், தன் வீட்டில், பள்ளியில் சக மாணவர்கள், ஒரு போக்குவரத்துப் போலீஸ் என்று 11 ஆத்துமாக்களை ஆதாயம் செய்துவிட்டான். அவனுக்கு தீடீர் என்று காய்ச்சல் வந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான். அவனுக்கு மூளைக் காய்ச்சல் என்று டாக்டர் கண்டறிந்து அதற்குரிய மருந்து கொடுத்துவந்தார்கள். 10 நாட்கள் ஆஸ்பத்திரியிலே சிகிச்சை பெற்று வந்தான். ஒரு நாள் அதிகாலை 4 மணிக்கு ஒரு நர்ஸ் அவனுக்கு மருந்து கொடுக்க வந்தார்கள். ஜானி அந்த நர்ஸ் கையை பிடித்து கெஞ்ச ஆரம்பித்தான். நர்ஸ் அக்கா, நர்ஸ் அக்கா எனக்கு இன்றைக்குப் பிறந்தநாள். இன்றுடன் 12 வயது முடிந்து 13வது வயது ஆரம்பிக்கிறது. நான் இது வரை 11 ஆத்துமாக்களை ஆதாயம் செய்துவிட்டேன். நான் இன்றைக்கு மரித்தால் இயேசுவிடம் போய்விடுவேன்.

இயேசு என்னைப் பார்த்து "ஜானி உனக்கு 12 வயது ஆகிறது, நீ 11 ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணி உள்ளாய். இன்னும் ஒரு ஆத்துமாவை நீ ஆதாயம் பண்ணியிருக்கக்கூடாதா? என்று கேட்பார், அது எனக்குப் பெரிய குறையாக இருக்கும். நர்ஸ் அக்கா உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள். இப்பொழுதே ஏற்றுக் கொள்ளுங்கள் Please என்று கெஞ்சினான். அந்த நர்ஸூம் அவரோடிருந்த சிநேகிதியும் ஜானியின் அந்த கெஞ்சுதலைக் கேட்டு, பாவ உணர்வு பெற்று அவனுடைய படுக்கைக்கு அருகில் இருவரும் முழங்கால் படியிட்டு ஜெபித்தார்கள். ஜானி அவர்கள் செய்த பாவம் ஒன்றொன்றாய் சொல்லிக் கொண்டே இருந்தான்.

இருவரும் கண்ணீரோடே ஒப்புக் கொடுத்தார்கள். ஜானி அந்த ஜெபத்தை முடித்து ஆமென் என்றுரைத்தான். 2 நர்ஸ்களும் சந்தோஷத்தால் நிறைந்து ஜானிக்கு நன்றி சொல்ல எழுந்தார்கள். ஜானி கைகளைப் பிடித்து நன்றி கூறினார்கள். ஆனால் ஜானி அவர்களுடைய நன்றி வார்த்தைகளைக் கேட்பதற்கு உயிரோடு இல்லை. அவன் இயேசுவின் சமூகத்திற்குள் 12 அல்ல 13 ஆத்துமாக்களைச் சேர்த்தவனாக மகிழ்வுடன் பிரவேசித்தான். இயேசுவும் அவனை முகமலர்ந்து வரவேற்றார். அந்த சிறு பையனுக்கு இருந்த ஆத்தும பாரம் போல் நாமும் இயேசுவுக்காய் செயல்படுவோமா?

**"காலம் கடந்திடும் முன்னே"** என்ற பாடலில் சகோ. எமில் ஜெபசிங் அவர்கள் கீழ்க்கண்ட இரு வரிகளை எழுதியுள்ளார்".

**"ஆத்தும ஆதாயம் செய்யார் சிரசினில் அடித்துக் கொள்வார்**
**மாய மாலம் புரிந்தோர்க்கு செம்மையாய் பதில் கொடுப்பார்.**

இந்தச் செய்தியை எழுதிமுடிக்கும் நேரத்தில் என் உள்ளத்தில் நான் அடிக்கடி பாடும் பாடல் நினைவிற்கு வந்தது. அதை சத்தமாகப் பாடினேன். அது எந்தப் பாடல் தெரியுமா?

**வாழ்நாள் எல்லாம் வீண் நாளாகச் சென்று போயிற்றே ஐயோ**
**மோசம் போனேன் விட்ட நன்மை அழுதாலும் வருமோ**
**ஆத்துமா ஒன்றும் ரட்சிக்காமல்**
**வெட்கத்தோடே ஆண்டவா**
**வெறும் கையனாக உம்மை**
**கண்டு கொள்ளலாகுமோ**

நீங்கள் ஷாலோம் ஊழியத்திற்கு கொடுக்கும் காணிக்கை ஆத்தும ஆதாயப் பணியில் செலவிடப்படுகிறது. எத்தனையோ மிஷனெரி ஸ்தாபனங்களை ஜெபத்தாலும், காணிக்கையினாலும் தாங்குகிறீர்கள். நல்லதுதான்! அந்தக் காணிக்கை மூலம் உங்கள் சார்பில் ஒரு ஊழியர் ஆத்தும ஆதாயம் செய்து கொண்டிருக்கிறார். அதில் உங்களுக்கும் நிச்சயம் பங்கு உண்டு. ஆனால் இது போதாது. தாங்கள் இருக்கும் இடத்தில் ஆத்தும பாரத்தோடு நீங்கள் ஆத்தும வேட்டையைத் துவக்குங்கள்.

முடிந்தால் **"கரையேறி உமதண்டை நிற்கும் போது இரட்சகா"** என்ற பாடலை முழுமையாகப் பாடி தயவு செய்து ஜெபித்து நல்ல தீர்மானம் எடுத்து, இயேசுவின் மந்தையில் எண்ணற்றோர் சேர்வதற்கு நீங்களும் காரணமாக மாற ஆத்தும பாரத்தோடு, ஆத்தும வேட்டையை இன்றே ஆரம்பியுங்கள். இயேசு உங்கள் நிமித்தம் மகிழுவார். பரலோகம் களிகூறும்.

**வாழ்க உங்கள் ஆத்தும வேட்டை!**
**வளருக உங்கள் ஆத்தும பாரம்!!**

**"ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்".** தானியேல் 12 : 3



## பணித்தளங்களில் போடப்பட்ட

# BrÏZôn ¡Qß - ûLI TmxLs

நமது பீல் ஆதிவாசி ஜனங்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் குடிநீர் கிடைக்க மிகவும் கஷ்டப்படுவார்கள். சில கிராமங்களிலுள்ள ஜனங்கள் பல கிலோ மீட்டர் தூரம் நடந்தே சென்று தங்களுக்குத் தேவையான குடிநீரை சுமந்து வருவார்கள். மேலும் கோடையில் இந்த ஜனங்கள் கழிவு நீரோடையின் அருகில் குழிகளை வெட்டி அதில் வரும் நீரையும், சுகாதாரமற்ற முறையில் கிடைக்கும் நீரையும் மட்டுமே குடிக்க பயன்படுத்த முடியும். மேலும் ஒரு சில கிராமங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட ஜனங்களுக்கு, ஊருக்குள் குடிக்க தண்ணீர் தரமாட்டார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் வசிக்கும் பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு, கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஜூன் மற்றும் ஜுலை மாதங்களில் CBN ஸ்தாபனத்தின் மூலம் மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் ஜாபுவா மாவட்டத்தில் உள்ள முன்டத், அந்தர்வேலியா, பிட்டோல், மாண்ட்லி, சோக்வாடா மற்றும் தலயா ஆகிய பகுதிகளில் உள்ள 25 கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு கைப்பம்பு அமைக்கப்பட்டது. CBN ஸ்தாபனத்தில் இருந்து **சகோ. பூபதி பாண்டு** மற்றும் **சகோ. சுனில் பாய்** அவர்கள் நமது பணித்தளத்தில் ஒரு மாத கால அளவு தங்கியிருந்து 25 கிராமங்களிலும் அடி குழாய்களை நிறுவினார்கள்.

தண்ணீர் தேங்கி நிற்கும் குட்டைகள், குளங்களுக்கு அருகில் உள்ள ஊற்று, இவைகளை குடிநீராக பயன்படுத்திய இடங்களிலும், மாசு நிறைந்த தண்ணீர் உள்ள பகுதிகளிலும், அடிகுழாய்கள் இருந்தும் கிறிஸ்தவர்களாக மாறியதின் விளைவாக கிராம மக்கள் குடிதண்ணீர் கொடுக்க மறுத்த இடங்களிலும் போர் போட்டு Hand Pump அமைக்க தேவன் உதவி செய்தார். சுத்தமான தண்ணீரைப் பார்த்த விசுவாசிகளும், கிராம மக்களும் குறிப்பாக சிறு பிள்ளைகளும் சந்தோஷமாக தண்ணீரைப் பருகினார்கள்.

வறண்ட மற்றும் மாசுபட்ட தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் நல்ல சுத்தமான நீர் கிடைக்குமா? என்று மக்கள் மனதில் எழும்பிய கேள்விக்கு வறண்ட நிலங்களில் ஆறுகளை ஊற்றுவேன் என்று வாக்களித்த நம் தேவனின் வாக்குப்படியே கிராம மக்களும், விசுவாசிகளும் சுத்தமான குடிநீரைக் கண்டும், பருகியும் ஆனந்தமடைந்தனர். இனி மாசுபட்ட நீரினால் பரவும் நோய்களைக் குறித்து பயமில்லை.

ஏனெனில் ஜீவத் தண்ணீராம் இயேசுவின் தயவால் தங்கள் பகுதிகளில் சுத்தமான நீர் கிடைத்த மகிழ்ச்சி அவர்கள் கண்களிலும் புன்னகையிலும் காண முடிந்தது. பல்வேறு தடைகள், நெருக்கங்கள், எதிர்ப்புகள் மத்தியிலும் 25 பகுதிகளிலும் Hand Pump அமைக்க உதவின தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரங்கள் பல! இதற்கு உதவின CBN ஸ்தாபனத்திற்கு நன்றி. தேவன் அவர்களையும் ஆசீர்வதிப்பாராக!




தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியும், அவருடைய பெரிதான கிருபையாலும், 485 பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக, சுமார் 625 கிராமங்களில் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சுமார் 1200 கிராமங்களில் விசுவாசிகளை தேவன் தந்துள்ளார். அப்படிப்பட்ட கிராமங்களில், ஆரம்ப நாட்களில், மரத்தடியிலும், ஜன்னல் வசதிகள் கூட இல்லாத சிறிய வீடுகளிலும், சின்ன பந்தல்களுக்கு கீழாகவும் ஆராதிப்பது உண்டு.

தேவகிருபையினால், இதுவரை 235 கிராம ஆலயங்களைக் கட்டி முடிக்க தேவன் கிருபை தந்துள்ளார். ரூ. 60,000 மதிப்பில் ஓடுகள் போட்ட கிராம ஆலயங்களும் ரூ.1 இலட்சம் மதிப்பில் சிமெண்ட் கூரை போட்ட ஆலயங்களும், ரூ. 3 இலட்சங்கள் செலவில் கான்க்ரீட் கூரை போட்ட ஆலயங்களும் 40 X 18 மற்றும் 50 X 20 அளவுகளில் கட்டப்பட்டுள்ளன.

இவைகளைக் கட்டுவதற்கு இயேசு விடுவிக்கிறார் ஸ்தாபனமும், அநேக சபைகளும், அநேக விசுவாச குடும்பங்களும் உதவியாக இருந்தார்கள். அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். இக்கிராம ஆலயங்களை பிரதிஷ்டை செய்யும்படியாக, நிதி உதவி அளித்த குடும்பங்கள் பணித்தளத்திற்கு வரும்போது, பீல் ஆதிவாசி விசுவாசிகள் எப்படியாக தேவனைத் துதித்து, அந்நியபாஷையில் ஆராதித்து உற்சாகமாக அந்த ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறார்கள் என்பதைக் கண்டு ஆனந்தக் களிப்புடன் தேவனைத் துதிக்கின்றார்கள்.

பிரியமானவர்களே! தேவனுடைய ஆலயத்தை நாம் கட்டும்போது தாவீதுக்கு அருளின கிருபைகளை நமக்குத் தருகிறார். **"நான் உனக்கு வீட்டை கட்டுவேன்; உன் சந்ததியை ஆசீர்வதிப்பேன்; உன் சிங்காசனம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்"** என்று வாக்குப்பண்ணுகிறார். தாவீதைப் போல் தேவனுடைய ஆலயத்தின் மேல் வாஞ்சையுள்ளவர்களாய், உங்கள் குடும்பத்தின் சார்பாக, சபையின் சார்பாக அல்லது ஊழியத்தின் சார்பாக ஆலயங்களை கட்டிக் கொடுக்க முன் வாருங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

பீல் மக்கள் மத்தியில் கிராம ஆலயங்களை கட்டுவதற்காக அனுப்பப்படும் நிதியுதவிக்கென வங்கியில் தனியாக **Sharing Love Mission Community Hall Project** கணக்கு (Account) ஆரம்பித்துள்ளோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **Sharing Love Mission. C.H. Project** | | | |
| A/C No | : | **912010035078075** | Bank | : | **Axis Bank** |
| IFSC Code | : | **UTIB0000105** | Branch | : | **Tuticorin** |

D.D, Cheque அனுப்பும்போது S.L.M. C. Project பேரில் (OR) Net Transfer மூலம் அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# பீல் ஆதிவாசி மாணவர்

## பராமரிப்புத் திட்டம்



மாணவனின் பெயர் : **பிரேம் பபேரியா**

தந்தையின் பெயர் : ஹிம்ராஜ் பபேரியா

தாயார் பெயர் : அனிதா பபேரியா

பிறந்த நாள் : 15.12.2006

படிக்கும் வகுப்பு : 1ம் வகுப்பு

சொந்த ஊர் : காளாகூட்

மாவட்டம் & மாநிலம் : ஜாபுவா, மத்தியப்பிரதேசம்

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

இவனுடைய தந்தை சகோ. ஹிம்ராஜ் பபேரியா இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இவர் அசுத்த ஆவிகளை வணங்கி வந்தும், பல பாவங்களுக்கும் அடிமையாக இருந்தார். இவருடைய கிராமத்தில் நடைபெற்ற மூப்பர்கள் கூடுகையில் கலந்துகொண்டார். அங்கே கொடுத்த செய்தியின் மூலம் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அனைத்து பாவத்தி–ருந்தும் தேவன் விடுதலை கொடுத்தார். தொடர்ந்து வேதம் வாசித்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தார்.

தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற பாரம் ஏற்படவே ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்து தன் சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.


**மாணவனைக் குறித்து :–** பிரேம் சுமாராக படிப்பான். விளையாட்டில் நல்ல ஆர்வமுடையவன்.

**ஜெபியுங்கள்:–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** ***Mrs. Daisy Deva Priya - Chennai.***

நீங்களும் மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். இன்னும் 259 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.

# ¡ [ ôŴô A. ÑúY u



**கிளாரா சுவேன்** 1834ஆம் ஆண்டு நியூயார்க்கிலுள்ள எல்மிரா என்னுமிடத்தில் பிறந்தார். அவரின் பெற்றோர் ஜாண்—கிளாரிஸா ஸீவே தம்பதியரின் 10 பிள்ளைகளில் கடைசி மகள் ஆவார். கிளாராவுக்கு 8 வயதானபோது அவருக்கு ஆறு வயது மூத்த சகோதரியான ஆன் மெத்தடிஸ்ட் சபையில் சேர்ந்தார். சகோதரியின் விசுவாச வாழ்க்கையும், தாயின் இனிய எளிய ஆவிக்குரிய வாழ்க்கையும் கிளாராவின் இளமனதில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களுடைய வாழ்க்கை “நான் ஏன் ஒரு கிறிஸ்தவளாக இல்லை? நானும் நல்லவளாக வாழ முடியாதா,” என்ற கேள்விகளை எழுப்பியது. இளம் வயதில் அவர் கேட்ட ஒரு பிரசங்கம், அவர் உள்ளத்தில் கிரியை செய்தது. தன்னை தேவனுக்கு அர்ப்பணித்து, அவரின் பிள்ளையாக வாழ வேண்டும் என்று உணர்ந்தார். தான் ஒரு மன்னிக்கப்பட முடியாத பாவி என்ற உணர்வு அவர் வாழ்வை இருளாக்கியது. ஆனால் தான் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிள்ளை என்பதை உணரத் தொடங்கியபோதோ அவருடைய வாழ்வில் ஒளி வீசத் தொடங்கியது. உள்ளத்தில் பேரானந்தம் அடைந்தார்.

சுவேன் சிறு வயதிலேயே மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வமுடையவள். கானன்டேகுவா என்ற இடத்திலுள்ள பள்ளியில் நடுத்தர வகுப்பினருக்கு கல்வி கற்பித்தார். அவர் மெத்தடிஸ்ட் திருச்சபையில் அங்கத்தினரானார். ஞாயிற்றுக்கிழமை ஆராதனை, ஞாயிறு பள்ளி, வாராந்திர ஜெபம், வகுப்பு கூடுகைகளிலும் பங்குகொள்ள தவறியதே இல்லை. ஆலய காரியங்கள் எதுவாக இருந்தாலும் உதவி செய்வதற்கு எப்போதும் தயாராக இருந்தார். சில காலம் ஞாயிறு பள்ளி வகுப்பு ஆசிரியராகவும் பணியாற்றினார். அந்த வகுப்பு அவருக்கு மகிழ்ச்சியானதாக இருந்தது. மாணவர்களில் சிலர் தங்களை கர்த்தரின் ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்தபோது அவரின் மகிழ்ச்சி பெரிதானது. அவரின் நேர்மையான வாழ்க்கை அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தை எற்படுத்தியது.

சுவேன் சிறுவர்களை நேசித்தாலும், ஆசிரியப் பணி அவருக்கு முழுமையான மகிழ்ச்சியைத் தரவில்லை. காஸ்டைல் ஆஸ்பத்திரியில் டாக்டர் கார்டீலியா கிரீனுக்கு கீழ் பணிபுரியும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தபோது மகிழ்ச்சியோடு ஆசிரியப் பணியை விட்டுவிட்டு, அங்கு 3 வருட பயிற்சியில் சேர்ந்தார். அது சில வேளைகளில் எரிச்சலூட்டக்கூடியதாக இருந்தாலும் முன்னர் செய்த பணியைவிட இதமாகவே இருந்தது. பின்னர் பிலடெல்பியாவிலுள்ள பெண்கள் மருத்துவக் கல்லூரியில் படித்து, 1869ஆம் ஆண்டு மருத்துவ பட்டம் பெற்றார்.

Rev. D.W. தாமஸ் மற்றும் அவரது மனைவியும் மெத்தடிஸ்ட் மிஷன் மூலமாக நடத்தப்பட்ட அனாதை இல்லத்திற்கு பொறுப்பாளர்களாக இருந்தனர். வட மேற்கு இந்தியாவில், பரேய்லி என்ற இடத்தில் வேலை பார்த்த அவர்கள், பெண்களின் மருத்துவ தேவையை கவனிக்க பெண் மருத்துவர் அவசியம் என்பதை உணர்ந்தனர். ஆண் மருத்துவர்கள், பெண்களுக்கு மருத்துவம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. உயர் ஜாதி பெண்கள், தங்கள் மருத்துவ தேவையை பூர்த்தி செய்ய முடியாத திறமையற்ற பெண் பிள்ளைகளால் கவனிக்கப்பட்டனர். அந்தப் பதவிக்குப் பொருத்தமான படிப்பும் கிறிஸ்தவ குணாதிசயமும் பொருந்திய **கிளாரா சுவேன்** M.D., அப்பதவியில் அமர்த்தப்பட்டார். இவ்வாறாக அவர் உலகின் முதல் பெண் மிஷனெரி மருத்துவரானார். தேவனின் அழைப்பிற்கு கீழ்ப்படிகிறோம் என்ற விசுவாசத்தில் மகிழ்ச்சியோடு நீண்ட பயணத்திற்கு தயாரானார். 1869ஆம் ஆண்டு நவம்பர் 3ம் நாள் நியூயார்க்கிலிருந்து கடற்பயணமாக புறப்பட்டு 1870ஆம் ஆண்டு ஜனவரி 3ம் நாள் மும்பை வந்த அவர் 1870ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் நாள் மெத்தடிஸ்ட் மிஷன் வருடாந்திர மாநாட்டின்போது, பரேய்லி வந்தடைந்தார்.

இந்தியா வந்தடைந்த அன்றே தன் மருத்துவ சேவையைத் தொடங்கினார். அந்த வருடமுடிவில் கிளாரா 1300 நோயாளிகளை கவனித்துள்ளார். 17 மாணாக்கர்களுக்கு மருத்துவப் பயிற்சி கொடுத்துள்ளார். அனாதை இல்ல பணி மட்டுமின்றி, மருத்துவ மாணவர்களுக்கு வகுப்பு, பட்டணத்திலுள்ள வீடுகளிலுள்ளவர்களின் அழைப்பிற்கிணங்கி வீடு சந்திப்பு போன்ற காரியங்களையும் பொறுமையுடன் செய்தார். மருத்துவ வகுப்பில் படித்த மாணவிகளும் அவருடன் பணி செய்ததினிமித்தம் நல்ல அனுபவம் பெற்றனர். செல்லுமிடமெங்கும் வேதாகமத்தின் பகுதிகளையும், கைப்பிரதிகளையும், அதன் மதிப்பை உணர்ந்தவர்களுக்கு கொடுப்பதற்காக எடுத்துச் செல்வார். 1876ஆம் ஆண்டு டாக்டர் சுவேன் இளைப்பாறுதல் தேவைப்பட்டதால் அமெரிக்கா திரும்பினார். மீண்டும் 1879ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் நாள் இந்தியா வந்தடைந்தார். சுவேன் கடற்பயணங்களின் போதும் இந்தியாவில் இருந்த நாட்களிலும் பல இன்னல்களையும் அபாயங்களையும் சகித்தார்.

இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு பெண்களை அவர்களின் பாவங்களிலிருந்து விடுவிக்கவும் அவர்களின் தரம் உயரவும் வந்தார் என்ற நற்செய்தியை அறிவிக்க, ஒரு மருத்துவராக தனக்கிருந்த திறமைகளைப் பயன்படுத்தினார். பெண்களுக்கு தனி மருத்துவமனை அவசியம் என்று உணர்ந்தார். 42 ஏக்கர் நிலத்தை ராம்பூர் நவாபிடமிருந்து வியக்கத்தக்க முறையில் பெற்றார். 1874ஆம் ஆண்டு, முதல் பெண்கள் மருத்துவமனை திறக்கப்பட்டது. முதல் வருடத்திலேயே 3000 பெண்களுக்கு மருத்துவ உதவி கொடுக்கப்பட்டது.

1885ஆம் ஆண்டு ரஜபுத்திர மன்னனின் மனைவிக்கு மருத்துவம் பார்த்தபோது, அரண்மனை மருத்துவராக அவருக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பை மிகுந்த யோசனைக்கும் ஜெபத்திற்கும் பின்னர் ஏற்றுக்கொண்டார். அதன் மூலம் ராணிக்கும் அரண்மனைப் பெண்களுக்கும் தினந்தோறும் வேதத்தை போதிக்கும் வாய்ப்பும் பெற்றார்.

தொடர்ந்து உடல் நலக்குறைவினால் சுவேன் 1896ஆம் ஆண்டு அமெரிக்கா திரும்பினார். 1906ஆம் ஆண்டு மீண்டும் சில மிஷனெரிகளோடு இந்தியா வந்தார். 18 மாதங்கள் தன் பழைய நண்பர்களோடும், பழைய காட்சிகளோடும் அறிவிலும், எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் வளர்ச்சியடைந்த இந்திய கிறிஸ்தவர்களைக் கண்டு மகிழ்ந்தார். 1908ஆம் ஆண்டு மீண்டும் நியூயார்க் திரும்பி இந்தியாவில் தன்னோடு மிஷனெரியாக இருந்த சிநேகிதியோடு சேர்ந்து வாழ்ந்தார். டாக்டர் சுவேன் தன் கடைசி வருடங்களில் மிகவும் பெலவீனமடைந்தார். 1910ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினம் அன்று காலையில் மண்ணுலக வாழ்வை முடித்துக் கொண்டு விண்ணுலக வாழ்வை ஏற்றார். சுவேன் தன் 25 வருட இந்திய வாழ்வில் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு சிகிச்சையளித்திருந்தாலும் தன்னை ஒரு சுவிசேஷகராகவே கருதினார்.

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| நாள் : | நேரம் : |
|---|---|
| **15.09.2012 (சனிக்கிழமை)** | **அதிகாலை 12.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை 24 மணிநேரம்** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க விரும்பினால் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.

**"இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்." (2 நாளா. 7:15)**

## `ôúXôm ª`ù]¬ ù_TdáÓûL

| நாள் | நேரம் |
|---|---|
| **08.09.2012, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் Bank Of Baroda வங்கி மூலம் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFS Code : BARB0TUTICO

நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : MBL0000106)**

AXIS BANK (U.T.I)
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

இந்தியாவின் புதிய குடியரசுத் தலைவராக பிரனாப் முகர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இந்தியாவின் 13வது குடியரசுத் தலைவராவார். இவர் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராக போட்டியிட்டு 69 சதவிகித வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவருக்கு உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி கபாடியா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

---

தலைவலி மற்றும் ஒற்றைத் தலைவலியை துரிதமாக போக்கி நிவாரணம் தரும் எலக்ரானிக் கருவி ஒன்றை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இது பார்வைக்கு எலக்ட்ரிக் ஷேவர் போல இருக்கும். பேட்டரி உதவியுடன் இயங்கக்கூடியது. இந்தக் கருவியை நமது கழுத்தின் வலது பக்கத்தில் வைத்து அழுத்த வேண்டும். இவ்வாறு 90 வினாடிகள் செய்தாலே போதும் தலைவலி குறைந்துவிடும் என்கிறார்கள்.

---

டெல்லியில் இருந்து சென்னை சென்று கொண்டிருந்த தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏற்பட்ட தீ விபத்தில் 32 பயணிகள் உயிரிழந்தனர். 25 பேருக்கு தீக்காயங்கள் ஏற்பட்டன. விபத்து நேரிட்ட அன்று அதிகாலை ஆந்திர மாநிலம் நெல்லூர் ரயில் நிலையத்திற்குக் கடந்து சென்று கொண்டிருந்த போது அந்த ரயிலில் தீ விபத்து ஏற்பட்டது. விபத்திற்கான காரணம் தெரியவில்லை, எனினும் மின்சாரக் கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கிறார்கள்.

---

கடந்த 25.07.2012 அன்று பள்ளிப் பேருந்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, பேருந்தில் இருந்த ஒரு துவாரத்தின் வழியாக இரண்டாம் வகுப்பு மாணவி கீழே விழுந்து, அந்த பேருந்து ஏறியே கொல்லப்பட்டார்.

நன்றி : www.dailythanthi.com

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

கிராம ஆலயம்

# தேவ்கா

## மத்தியப்பிரதேசம்



தேவ்கா கிராமம் குஜராத், மத்தியபிரதேச மாநில எல்லையில் அமைந்துள்ள மிகவும் உள்ளடக்கிய கிராமமாகும். 1996ம் ஆண்டுவரை இங்குள்ள மக்களுக்கு இயேசு கிறிஸ்துவைப்பற்றி ஒன்றும் தெரியாது. 1996ம் ஆண்டு ஷாலோம் ஊழியர் மன்னு பாபோர் அவர்கள் தேவ வழிநடத்துதலின்படி மத்தியபிரதேச மாநிலம் ஹக்வானி கிராமப் பகுதியில் ஊழியம் செய்தார். இவருடைய ஊழியத்தின் மூலமாக அநேகர் தேவனை ஏற்றுக் கொண்டார்கள். இவருடைய ஊழியத்தின் மூலமாக சுதேச ஊழியர்கள் எழும்பி ஊழியம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இத்தகைய சூழலில் தேவ்கா கிராமத்தைச் சேர்ந்த சகோ. தல்சிங் பேடி பிசாசின் பிடியின் காரணமாக வியாதிப்பட்டு மிகவும் அவதிப்பட்டார். 12 நாட்கள் தொடர்ச்சியாக படுத்த படுக்கையாக இருந்த இவரை மருத்துவமனைகளுக்கும் மந்திரவாதிகளிடமும் கொண்டு சென்று, சிகிச்சைகளும் பூஜைகளும் செய்தும் ஒரு பலனுமில்லை. இறுதியாக, மரிக்கும் தருவாயில் இருந்த இவரை ஷாலோம் ஊழியரிடம் கொண்டு சென்றனர். ஊழியர் இவருக்காக பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் ஜெபத்தினைக் கேட்டு, மரணத்தின் விளிம்பிலிருந்த இவருக்கு பூரண சுகத்தினைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலமாக முழுக் குடும்பத்தினரும் ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து ஷாலோம் ஊழியர் சகோ. வால்சிங் சாரேல் அவர்கள் இவருடைய வீட்டில் ஆராதனை நடத்தினார். அநேகர் தேவன் பேரில் விசுவாசம் வைத்தார்கள். தொடர்ந்து 2007ம் ஆண்டு சகோ. தல்சிங் பேடி அவர்களின் குடும்பத்திருந்து சகோ. ராகேஷ் பேடி அவர்கள் தேவனுடைய அழைப்பை பெற்று ஊழியம் செய்ய அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்தார்கள். தேவன் இவருக்கு ஊழியம் செய்ய பாரத்தினைக் கொடுக்கவே, ஷாலோமில் பயிற்சி பெற்று, தனது சொந்த கிராமத்தை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறார். இவருடைய ஊழியத்தின் பலனாக 50 குடும்பத்தார் தேவனை ஏற்றுக் கொண்டு ஆராதனைக்கு வருகிறார்கள். இவர் தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாக தரவே, அதில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ரூ. 1 லட்சம் மதிப்பில் ஒரு கிராம ஆலயம் கட்டப்பட்டு 21.04.2012 அன்று பாஸ்டர். ஆமோஸ் (A.G. Church, Marthandam) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஊழியம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டம், ஏ.ஜி. சபை மூலமாக சகோ. **C.T. ராஜன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2012-2014. TN/WPP-95/SR/2012-2014
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## பணித்தளங்களில் போடப்பட்ட 25 ஆழ்துழாய் கைப் பம்புகளில் சில


ஆரம்ப ஜெபம்


பிரதிஷ்டை ஜெபம்


சந்தோஷத்துடன் தண்ணீர் பிடிக்கும் பெண்கள்


மகிழ்ச்சியுடன் தண்ணீர் பருகும் சிறுமி

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை (தாமரைக்குளம்) -29.07.2012


பிரதிஷ்டை வேளை


போதகர் மற்றும் சபை ஊழியர்களுடன் சுதேச ஊழியர் குடும்பம்

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss